செ.வெ.எண் 804 நாள்.6.11.09

# பத்திரிகை குறிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ராம. சுப்புராம், (திருமயம்), திரு. எம். அன்பழகன் (பழனி), திரு. ம. ராஜ்குமார், (பெரம்பலூர்) திரு. கோ. ஐயப்பன் (கடலூர்), திரு. ம. குணசேகரன் (மானாமதுரை) திரு. பெ. மோகன், (ஒட்டப்பிடாரம்) மற்றும் சட்டமன்றப் பேரவைச் செயலாளர் திரு. மா.செல்வராஜ் ஆகியோர் அடங்கிய சட்டமன்றப் பேரவை விதிகள் குழு வட இந்திய மாநில ஆய்வுப்பயணம் மேற்கொண்டு இன்று (6.11.2009) பிற்பகல் 3.30 மணிக்கு, மேற்கு வங்க சட்டப் பேரவைத் தலைவர் திரு. அசீம் அப்ருல் அலீம் தலைமையிலான விதிகள் குழுவுடன் கொல்கத்தாவில் கலந்துரையாடியது.

இக்குழுக் கூட்டத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள், பல்வேறு கருத்துகளுக்கு இடையே, தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வரும் நலத்திட்டங்களான ஒரு ரூபாய்க்கு 1 கிலோ அரிசி வழங்கும் திட்டம், இலவச கேஸ் அடுப்பு வழங்கும் திட்டம், உயிர் காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம், படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம், முதியோர் உதவித் தொகை திட்டம் உள்ளிட்ட பல்வேறு சமூகநலத் திட்டங்கள் குறித்து விளக்கினார்கள்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

மா. செல்வராஜ்,
செயலாளர்